1975 மார்ச் 27]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, புதிதாக உயர் நிலைப் பள்ளிகளை அதிகமாகத் திறப்பதைவிட இருக்கிற பள்ளிகளில் கூடுதலாகக் கட்டிடங்கள் கட்டி, கல்வியின் தரத்தை உயர்த்த அரசு ஆலோசனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட கருத்துக்குத்தான் முக்கியத்துவம் தரவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த வகையில்தான் முக்கியத்துவம் தருகிறோம். ஆகவே எந்தெந்த இடங்களில் இட வசதியைப் பெருக்கியாக வேண்டுமோ அந்தந்த இடங்களில் இட வசதியைப் பெருக்கும் வகையில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பள்ளிகள் ஆரம்பிக்கப் பப்ளிக் காண்ட்ரிபியூஷன் தேவை என்ற நிர்ப்பந்தம் இருக்கிற காரணத்தால் சில பிற்பட்ட பகுதிகளில் வசதியில்லாத மக்கள் இருக்கிற பகுதிகளில் உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்க காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் கால தாமதத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

MR. DEPUTY SPEAKER : This does not relate to the main question.

திரு. வி. பழனிவேலு : தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்கு எவ்வளவு பணம், நிலம் தேவை? அதிகப்படியாக எத்தனை மாணவர்கள் தேவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மெயின் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

THIRU J. JAMES Point of Order, Sir.

MR, DEPUTY SPEAKER: No point of order during question hour. You raise the point of order immediately after question hour.

உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்

*463 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றில உள்ள எந்தெந்த அரசினர் உயர் நிலைப் பள்ளிகளுக்குத் துணைக் கட்டடங்கள் அமைக்கும் செயற் குறிப்புக்கள் ஆய்வில் உள்ளன?

(இ) இவைகளைக் கட்டி முடிப்பதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நெல்வி மரத்துக் கண்டிகை அரசினர் (கழக) உயர் நிலைப் பள்ளிக்குத் துணைக் கட்டிடம் அமைக்கவும் மற்றும் கும்முடிப்பூண்டி அரசினர் (கழக) உயர் நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் அமைக்கவும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன. எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எந்தப் பள்ளிக்கும் துணைக் கட்டிடம் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

(இ) மேற்படி பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்தபின்தான் கட்டிட வேலையைத் துவங்க இயலும். பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமைப் பொறியாளரிடமிருந்து பெற்று அனுப்பி வைத்த மதிப்பீடு தற்கால நிலவர விலைப்படி மாற்றி அமைக்க திருப்பி அனுப்பப் பட்டு திருத்திய மதிப்பீடு பெறப்பெற்றது. இந்தக் கட்டிட வேலைகளுக்கு நிர்வாக ஒப்புதல் அளிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, பரிசீலனையில் உள்ள இந்த இரண்டு உயர்நிலைப் பள்ளிகளில் இட வசதியில்லாமல் மாணவர் கள் மரத்தடியில் படிக்கிறார்கள். ஆகவே இந்த இரு ஒன்றியங் களில் கட்டிடம் இல்லாப் பள்ளிகளின் கணக்கை எடுத்து வரும் கல்வி ஆண்டில் பரிசுச் சீட்டு திட்டத்தின் கீழ் தனி ஒதுக்கீடு செய்து கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும், எல்லா ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுமுள்ள எல்லா உயர் நிலைப் பள்ளிகளிலுள்ள குறைகளையும் முழுமையாக நிறைவேற்றுவது என்பது இயலாத ஒன்று. படிப்படியாகத்தான் இதைச் செய்ய வேண்டும். ஆகவே, இந்த வகையில் எந்தெந்த இடங்களில் வசதி மிக மிகக் குறைவாக இருக்கிறதோ அவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த வகையில்தான் செயல்படுத்தப்படுகிறது.

திராட்சை பயிரிட வங்கிக் கடன்கள்

*466 வினா—திரு. நா. பழனிசாமி : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்டவினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது நிலவள வங்கிகள் மூலம் திராட்சை பயிரிட ஏக்கருக்கு எவ்வளவு ரூபாய் கடன் வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

நிலவள வங்கிகள் மூலம் திராட்சை பயிரிட ஏக்கருக்கு ரூபாய் 10,000 கடன் வழங்கப்படுகிறது.